REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1½ அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 11உ புதன் (27—7—55) ★ ★ வெளியூர்: ஆடி 12உ வியாழன் (28—7—55) [இதழ் 37

உண்மைதான்-ஆனால்...!

புதுடில்லி, ஜூலை 25—

"தென்னிந்தியாவில் ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலை நிறுவ, நெய்வேலிதான் சிறந்த இடமென உர உற்பத்திக்குழு கருத்தறிவித்திருப்பது உண்மைதான்; ஆனால், அங்கு ஒரு தொழிற்சாலையை நிறுவுவது பற்றி சர்க்கார் இன்னும் எந்தவிதமான முடிவும் மேற்கொள்ளவில்லை,"

—என்று, மத்திய சர்க்கார் உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

'காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தட்டும்'

'மக்கள் தீர்ப்புக்குத் தலை வணங்குகிறோம்'

இந்தியாவுக்கு பாக். தூதுவர் அறைகூவல் விடுக்கிறார்

சென்னை, ஜூலை 26—

"காஷ்மீரை, பாகிஸ்தானியர்கள் இன்னும் நூறு ஆண்டுகள் கழித்தாலும்கூட மறக்கமாட்டார்கள்; காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்துவதற்குக் காலந் தாழ்த்தும் இந்தியாவை நான் குற்றங்காண வேண்டியவனாயிருக்கிறேன்,"

—என்று, இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் தூதுவரான ராஜா கஜனபர் அலிகான் இங்கு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"காஷ்மீர் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதற்குரிய ஒரே வழி, அங்கு, ஒழுங்கான — நியாயமான முறையில் வாக்கெடுப்பு நடத்துவதுதான்; வாக்கெடுப்பு நடுநிலையாளர்களின் மேற்பார்வையின் கீழ் நடத்தலாம்;

"இந்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் காஷ்மீரைப் பற்றிக் கூறியவை, பாகிஸ்தானில் பெரும் கலக்கத்தை உண்டுபண்ணிவிட்டது; காஷ்மீர் அரசியல் நிர்ணய சபையின் முடிவுதான் இறுதியானது என்பதல்ல; காஷ்மீர் பிரச்சினைக்கு முடிவு கூறுமுன், காஷ்மீர் மக்களின் எண்ணத்தைத் தெரிந்து கொள்ளத் தவறிவிடக் கூடாது;

"நடுநிலைமையாளரின் மேற்பார்வையின்கீழ், காஷ்மீரில், நாளையே வாக்கெடுப்பு நடத்தக் கூட, பாகிஸ்தான் தயாராக இருக்கிறது;

"அம்மாதிரி வாக்கெடுப்பு நடத்துவதைத் தாமதப்படுத்துவதின் மூலம், காஷ்மீர் மக்களைக் கஷ்டப்படவிடக் கூடாது;

"என் சொந்தக் கருத்தெல்லாம் ஒரு மூன்றும் மனிதரின் தலையீடின்றியே—வேறு நடுநிலையாளர்களின் மேற்பார்வை இன்றியே, இந்தியாவும்—பாகிஸ்தானும் ஒன்று சேர்ந்து வாக்கெடுப்பு நடத்த முடியும்;

"இந்தியாவின் கௌரவம் உலகத்தில் இன்று ஓங்கி நிற்கிறது; மேலும் காஷ்மீருக்கு இந்தியா எத்தனையோ காரியங்களைச் செய்திருக்கிறது; அப்படி இருக்க, இந்தியா, ஏன் இந்த ஒரு நல்ல சூழ்நிலையை தனக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது?

"காஷ்மீர் மக்களின் தீர்ப்பு இந்தியாவிற்குச் சாதகமானதாகயிருக்குமானால் அந்தத் தீர்ப்புக்குத் தலைவணங்க, பாகிஸ்தான் தயாராக இருக்கிறது."

கான்பூர் வேலை நிறுத்தத்தின் விளைவு

அண்மையில் கான்பூரில் நடைபெற்ற நெசவாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தினால், 103 லட்சம் மனித நேர மனித உழைப்பு நஷ்டம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

131.72 லட்சம் ராத்தல் நூல்; 450.74 லட்சம் கெஜம் துணி; 58 லட்சம் கெஜம் சணல் — இவை உற்பத்தியாவது நஷ்டமாயிற்று.

இந்தத் தகவலை, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலாக மத்திய தொழிலாளர் இலாகா மந்திரி கந்துபாய் தேசாய் தந்திருக்கிறார்.

வட நாட்டு விவசாயிகள் நஷ்டமடையாமலிருக்க....

இந்தியப் பேரரசு செலவு செய்தது ரூபாய் 4·63 கோடி

கோதுமையும், பயிறு வகைகளும் கொள்முதல் செய்யப்பட்டனவாம்

புதுடில்லி, ஜூலை 26—

"விவசாயப் பண்டங்களின் விலை விழ்ச்சியைத் தடுப்பதற்கான இந்திய சர்க்காரின் முயற்சிக்கொப்ப, கோதுமை, பயிறு வகைகள் முதலியன கொள்முதல் செய்வதற்காக, மாநில அரசாங்கங்களுக்கு மத்திய சர்க்கார் இதுவரை ரூ 4.63 கோடி தந்துள்ளனர்,"

—என்று, மத்திய அரசாங்க விவசாய இலாகா மந்திரி டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தத் தொகை மானியமாகத் தரப்படவில்லை; மத்திய சர்க்காருக்காக, மாநில சர்க்கார், விலை வீழ்ந்துவிட்ட பண்டங்களை நியாய விலைக்கு வாங்கிக் குவித்தனர்;

"உத்திரப் பிரதேசத்தில் ரூ. 2.50 கோடிக்கும், பஞ்சாபில் ரூ. 1.25 கோடிக்கும் உணவுப் பொருள்கள் வாங்கப்பட்டன. இங்குதான் மிகப் பெரும் அளவில் உணவுப் பொருள்கள் வாங்கப்பட்டன;

"இதுவரையில் 76,644 டன் கோதுமை, 1,562 டன் பயிறு இன்னுஞ் சிலவும் வாங்கப்பட்டன,"

என்றும் கூறப்பட்டது.

இதுவரையில், வாங்கப்பட்ட எந்த உணவுப் பொருளும் மீண்டும் விற்கப்படவில்லை.

வருமானவரி தராது இந்திய சர்க்காரை ஏமாற்றியவர்கள்

ரூ. 3 கோடி வருமானம் மறைக்கப்பட்டது

புதுடில்லி, ஜூலை 26—

வருமான வரி இலாகாவுக்கு 1955 மே 31-ந் தேதி வரை வரியை ஏய்த்ததாக மத்திய ரெவினியூ போர்டுக்கு வந்த 83 வழக்குகளில் ரூ. 3 18,28,718 வரையில் வருமானம் மறைக்கப்பட்டதாக மக்கள் சபையில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை கூறுகிறது.

இந்த 83 வழக்குகளிலும், இந்திய வருமான வரி இலாகாவுக்கு வரவேண்டிய தொகை ரூ. 1,37,18,748 ஆகும் இதுவரை ரூ. 1,20,13,376 வசூலிக்கப்பட்டு விட்டதாம்.

இன்னும் வருமான வரி விதிப்பு நிர்ணயத்திற்காக வந்துள்ள 80-மனுக்கள் சர்க்காரின் பரிசீலனையிலிருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

வரி விதிப்பு நிர்ணயம் செய்ய திட்டம் எதுவுமில்லாத நிலையில் சுமார் 379 பேர்களின் வருமானம் கணக்கிடப்பட்டு, வரி விதிப்புச் செய்யப்பட வேண்டியிருக்கிறது.

இந்த தகவல்களை அறிக்கை மிகச் சுருக்கமாகவே தந்திருக்கிறது.

வருமான வரி விதிப்பு பற்றியும், அதில் சர்க்காருக்கு எத்தனை பேர் வரி தராது, பட்டை நாமம் சாத்தினர் என்பது பற்றியும், அதனால் சர்க்காருக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டம் என்பது பற்றியும் விபரங்கள் விரிவாகத் தரப்படவில்லை.

வரி விதிப்பை அதிகரிப்பதை மந்திரியே எதிர்க்கிறார்!

திருச்சி, ஜூலை 25—

"இப்போதுள்ள வரிவிதிப்பின் அளவை உயர்த்துவதை நான் எதிர்க்கிறேன்;

"மக்களின் சக்திக்கு மீறி வரி விதிக்கப்படக்கூடாது; அதிக வரிச் சுமையை அவர்கள்மீது சுமத்தக்கூடாது;

"இன்று சென்னை மாநிலத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலை, மேலும் அவர்கள்மீது வரி விதிப்பதைத் தாங்கிக் கொள்ளத்தக்கதாயில்லை,"

என்று, சென்னை தொழில், விவசாய இலாகா மந்திரி பக்தவத்சலம், மாப்பிள்ளைநாயக்கன்குளம் நகரசபை, 'மார்க்கெட்' ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பாக். எல்லையில் ஆப்கன் துருப்புகள்?

பாக்—ஆப்கன் எல்லையிலுள்ள டோர்காம் வரை ஆப்கானிஸ்தான் தனது துருப்புக்களைக் கொண்டு வந்து நிறுத்தியிருப்பதாக பாகிஸ்தான் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருக்கிறதாம். ஆப்கானிஸ்தானத்தில் சமீபத்தில் படை திரட்டலும், படைகளின் முன்னணி நடமாட்டங்களும் நடந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

புகையிலை சாகுபடி

நடப்பு ஆண்டில், 8,37,000 ஏக்கராவில் புகையிலை சாகுபடி செய்யப்பட்டிருக்கிறதென்றும், மொத்தம் சுமார் 2,38,000 டன் உற்பத்தியாகுமென்றும் தெரியவருகிறது.

வெள்ளத்தால் லட்சம் மக்கள் அவதி

அசாம் மாநிலம் துண்டிக்கப்பட்டது

பிரம்மபுத்திரா விளைவிக்கும் சோகம்

கௌஹாத்தி, ஜூலை 26—

இதுவரையில் ஏற்பட்டிராத வகையில், அசாம் மாநிலத்தின் 'சோக நதி'யான பிரம்மபுத்திராவில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 72 மணி நேரத்தில் பெய்த பெருமழையின் விளைவாக நதி பிரவாகமெடுத்து சுமார் 100 கிராமங்களில் வசிக்கும் லட்சம் மக்களுக்குத் திண்டாட்டத்தை ஊட்டியிருக்கிறது.

பிரம்மபுத்திராவின் சுமார் 12 கிளை நதிகளும் கரைகளை உடைத்துக்கொண்டு, கிராமங்களில் வெள்ளத்தைப் பாய்ச்சி இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

அசாம் ரயில்பாதைகள் மூன்று இடங்களில் வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டுவிட்டன; அசாம், இந்தியாவின் இதர பகுதிகளுடன் தொடர்பு கொள்ள இயலாது தனித்து விடப்பட்டுவிட்டதாக ஷில்லாங் செய்தி ஒன்று கூறுகிறது.

கம்பி இல்லாத் தந்தி, விமானப் போக்குவரத்து இவற்றால் மட்டுமே அசாமுடன் தொடர்பு கொள்ள முடியும் எனும் நிலை நிலவுகிறதாம்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு திப்ருகாரில் வெள்ளத்தின் அளவு ஒரு அடி உயர்ந்திருக்கிறதாம்.

வெள்ளத்தால் மிக அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதி திப்ருகார் பகுதி என்று கூறப்படுகிறது.

திப்ருகார் நகரத்தில் முக்கால் பகுதிக்கு மேல் இப்போது ஒன்று முதல் நான்கடி தண்ணீரில் மூழ்கி இருக்கிறதாம்.

திப்ருகாரில் மோகன கட்டம், அமோராகுரி முட்டாக்சான் முதலிய பகுதிகள், சுமார் ஆறடி நீரில் மூழ்கி இருக்கின்றனவாம். இந்தப் பகுதி மக்கள் அவசர அவசரமாகக் கட்டப்பட்ட மூங்கில் பந்தல்களிலும், மேடைகளிலும் தங்கித் தவித்துக்கொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

திப்ருகார் நகரில் தேயிலைத் தொழில் பிரசித்தி பெற்றது. அந்த நகரம் இப்போது வேலையற்று நிலை நின்று போய் தவிப்பதாகக் கூறப்படுகிறது.

சர்க்கார், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

புதுடில்லியில் கட்டப்படும் பள்ளிக்கு ரூ. 1-லட்சம்

சென்னை சர்க்கார் தருகிறது

அதிகாரிகள் கோரிக்கைக்கு காமராசர் இணக்கம்

புதுடில்லி, ஜூலை 26—

புதுடில்லி லோடி சாலையில் கட்டப்பட்டு வரும் சென்னை கல்விச் சங்கப் பள்ளிக்கூட புதிய கட்டிடத்திற்கு, சென்னை சர்க்கார் ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கியிருக்கின்றனராம்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் டில்லியில் வேலை செய்யும் தமிழர்களின் குழந்தைகள் கல்வி பயிலுகின்றனவாம்.

இந்த சென்னை கல்விச் சங்கப் பள்ளிக் கட்டிட நிதிக்கு உதவுமாறு, முதன் மந்திரி காமராசரை சங்க அதிகாரிகள் கேட்டிருந்தனராம்; அதன் விளைவாகவே, இந்த மானிய உதவி தரப்படுகிறது.

நம் நாடு
தி.மு.கழக இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—7—'55 புதன்

காலம் கடந்த ஒன்றுதான்!

சென்னை மாநில கல்வித் துறையினர், 'மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில், 15 சதவிகித இடங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், 25 சதவிகித இடங்கள், இதர பின்தள்ளப்பட்ட வகுப்பினருக்கும் ஒதுக்கித்தரவேண்டும்' என்றும், 'இந்த உத்தரவை சரிவர அமுல் செய்யாத கல்லூரிகள் சர்க்காரிடமிருந்து பெறும் மானியத் தொகையை இழக்க நேரிடும்,' என்றும் உத்தரவிட்டிருக்கின்றனர்.

தாழ்த்தப்பட்ட — பின்தள்ளப்பட்ட வகுப்பினர், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், இதர சமூகத்தினரைப் போன்றே முன்னேறவேண்டும். அதற்கு அரசாங்கம் எல்லா வழிவகைகளையும் வகுத்துத் தரவேண்டும் என்பதில், ஒரு சில சுயநல பிற்போக்கு வாதிகளைத் தவிர, நியாய உள்ளமும், நேர்மை நெறியும் கொண்ட எவருக்கும் மாறுபட்ட கருத்திருக்க முடியாது.

வாழ்க்கையில் உயர்ந்திருப்பவர்கள், வாழ்வின் அடித்தளத்தில் அமிழ்த்தப்பட்டுக் கிடக்கும் மக்களைக் கைதூக்கிவிட்டு, தங்களைப்போல அவர்களும் வாழச் செய்ய உதவவேண்டியது இன்றியமையாத நாகரிகத் தன்மையாகும். ஆனால், இந்த நாட்டில்தான், ஏற்கனவே, முன்னேறியுள்ள—சகல துறைகளிலும் ஆதிக்கஞ் செலுத்துகிற வாய்ப்புப் பெற்றிருப்பவர்களுக்கு, அந்த நாகரிகம் தெரியாமற்போய்விட்டிருக்கிறது.

'வாழு; வாழ விடு!' என்ற கோட்பாட்டை, தனது மூல முழக்கமாக்கிக்கொண்டு, சமூகத்தில் இதரரைப்போல தானும் வாழ வேண்டும் என்று பிறர் விரும்புவதே, 'பாப காரியம், ஆண்டவனுக்கடுக்காது,' என்று கூறுகிற நிலையில்தான் வாழ்வின் சகல துறைகளிலும் முன்னேறியுள்ள பார்ப்பனர்கள் கூறிவந்தனர் — இன்னமும் சிலர் அந்தக் கருத்துக்கொண்டவர்களாக இருக்கின்றனர்.

தாங்களாக முன் வந்து, தாழ்த்தப்பட்டிருப்பவர்கள் முன்னேற வழி செய்யாவிட்டாலும், தாழ்ந்த நிலையிலிருப்போர் தாங்களாகவே, தலையெடுத்து, முன்னேற முயற்சிப்பதற்கும் முட்டுக்கட்டை போடுபவர்களாகவே இந்த நாட்களில்கூட பார்ப்பனர் விளங்கி வருகின்றனர் என்பதைத்தான், சர்க்கார் கல்வித் துறை இலாகா காலங்கடந்தேனும் இப்போது பிறப்பித்திருக்கிற உத்திரவு கூறுகிறது.

'இந்தியாவில் அரசியல் ஒற்றுமை வேண்டுமானல், அதற்கு கலாச்சார ஒற்றுமை வேண்டும்; கலாச்சார ஒற்றுமை வேண்டுமானல், சவமொழியால்தான் நாட்டில் அத்தகு ஒற்றுமையை உருவாக்க முடியும்; ஏனெனில் கடந்த காலத்தில் இடையறுமல், கலாச்சாரம், இலக்கியம், மதம், முதலிய பரம்பரை சம்பிரதாயங்களை வழங்கி வந்துள்ளது சவமொழிதான்' என்று, சில பார்ப்பனர்கள் கூறுகின்றனர்.

அந்த பார்ப்பனர்கள்தான், —கடந்த காலத்திலுஞ் சரி, நிகழ் காலத்திலுஞ்சரி—செத்துப்போன சவ மொழிக்கு உயிரூட்ட முயற்சிப்பவர்கள்; எதிர்காலத்திலும் தொடர்ந்து முயற்சிப்பார்கள் என்ற நம்பிக்கைக்குப் பாத்திரமாகியிருப்பவர்கள் அவர்கள்; எந்த மொழி மீண்டும் உயிர் பெற்ருல், 'இந்தியாவில் கலாச்சார ஒற்றுமையை நிலைநாட்டி, அதன் மூலம் அரசியல் ஒற்றுமையைப் பெற்று விடலாம்,' என்று கூறுகின்றனரோ, அந்த மொழியான சவமொழிக்குத் தொட்டிலாய், அன்பும் ஆதரவும், ஆன்ரோரின் ஆசியும், ஆட்சிப்பீடத்திலிருக்கும் அமைச்சர் சிலரின் ஆதரவும் பெற்றுத்தரும் கூடமாய் விளங்கும் சென்னை மைலாப்பூரில் உள்ள விவேகானந்தா கல்லூரியில்தான், இந்தியாவில் கலாச்சார ஒற்றுமையை உருவாக்க வழிகூறும் பார்ப்பன சமூகத்தவருக்கே, அங்குள்ள இடங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்ரென்பதே முக்காலே மூன்று விசம் சதவிகிதமும் தரப்படுவதை நாம் காண்கிரேம்.

கலாச்சார ஒற்றுமையை உருவாக்கும் என்று அவர்கள் வர்ணிக்கிற வடமொழிக்கு—சவமொழிக்கு — தாலாட்டுப் பாடப்படும்விவேகானந்தா கல்லூரியில்தான், 'எல்லாம் அவாளுக்கே' என்றநிலை நீடிக்கிறது. வேறெந்த கல்லூரி நிர்வாகமும், 'எல்லா இடங்களும் ஒரு வகுப்பு மாணவர்களுக்கே; அதுவும் உயர்குடி பிறந்தோருக்கே,' என்று கூறும் அநீதியை இத்தனை பகிரங்கமாகச் செய்ய முன்வரமாட்டார்கள் என்றுகூட சென்னைவாசிகள் கூறுகின்றனர்.

இந்த அநீதியின் வடிவங்கள் தான், இந்தியக் கலாச்சார உருவாக்கத்திற்கு வழி தேடிக் கூறுகின்றன — என்னே வேடிக்கை!

சர்க்கார், இத்தனை காலங் கடந்த பின்பேனும் கண்விழித்துக்கொண்டு, நியாய வழி நடக்குமாறு கல்லூரிகளுக்கு உத்தரவிட வந்திருக்கின்றனர்.

இத்தனை ஆண்டுக் காலமாக, சென்னை அரசியலார் என்ன செய்துகொண்டிருந்தனரோ தெரியவில்லை.

'கல்லூரிகளில், ஒரு வகுப்பாரே ஆதிக்கம் செலுத்துவது அநீதியின்பாற்பட்டதல்ல,' என்று எண்ணிக்கிடந்தனரோ! அல்லது, 'என்ன மோசம் போய்விடும்—உயர்ந்த வகுப்பாரே தொடர்ந்து மேலும் உயர்ந்துகொண்டிருக்கவும், தாழ்ந்த வகுப்பார் முன்னேற வழியின்றித் தவிக்கவும் செய்வதினல்?' என்று எண்ணினரோ தெரியவில்லை!

கல்லூரிகள் சிலவற்றில் தாழ்த்தப்பட்ட — பின்தள்ளப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கென தனி இடம் ஒதுக்காது, எல்லா இடங்களும் ஒரு வகுப்பாருக்கே எனும் அநீதி, சர்க்காரால்—பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, மேலும் பொறுக்க முடியாது, நெஞ்சை உறுத்தவேதான், சர்க்கார் இப்போது உத்தரவு பிறப்பிக்கின்றனர் என்று நாம் கருதுகிரேம்.

மேலும், இந்த உத்தரவைச் சரிவர அமுல் செய்யாத கல்லூரிகளுக்கு சர்க்கார் வழங்கும் மானியத் தொகை கிடைக்காது என்ற அளவுக்கு சர்க்கார் கடுமையாக எச்சரித்திருப்பதிலிருந்தே, கல்லூரிகளில் சிலர் கொண்டுள்ள 'சுய குல முன்னேற்ற' சுயநலப் போக்கின் அளவு தெரியத்தான் செய்கிறது.

சர்க்கார், இந்த உத்திரவினை, சில ஆண்டுகளேனும் முன்கூட்டியே பிறப்பித்திருந்திருப்பார்களேயானல், நமது வரைகடந்த பாராட்டலுக்குரியவராகியிருப்பர். ஆனல் இப்போது, 'இத்தனை காலங்கடந்தேனும் இப்படி உத்திரவொன்றைப் பிறப்பித்தார்களே,' என்ற அளவில்தான் நமது பாராட்டினைப் பெற முடிந்தவர்களாகியிருக்கின்றனர்.

எப்படியேனும், நியாயத்தை நிலைநாட்ட காலங்கடந்தேனும் அரசாங்கம் முன்வந்ததற்காக, தமிழ் மக்கள் சென்னை அரசியலாரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

புற்றுநோயை போக்க புதிய முறை!

கதிரியக்கமுள்ள கோபால்டு தயாராகிறது

ஐக்கன் (தென் கரோலினு), ஜூலை 26—

ஸாவன்ஞ நதிக் கரையில் நிர்மாணித்துள்ள அணு உலைகளிலிருந்து கதிரியக்கமாக்கப்படும் கோபால்டு, புற்று நோய் சிகிச்சைக்குப் பயன்படுமென அறிவிக்கப்படுகிறது.

கதிரியக்கமுள்ள கோபால்டு அதிகமாகத் தேவைப்படுவதை, இதனல் ஒருவாறு சமாளிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில், இங்குள்ள அணு உலைகள் மூலம் கதிரியக்கமுள்ள கோபால்டு உற்பத்தி செய்யப்படும்.

இந்தியாவிலும், இத்தாலியிலும் அமைக்கப்படும் முதலாவது அணு உலைகளில் பயன்படுவதற்காக இங்கிருந்து 'ஹெவி வாட்டர்' என்னும் 'கன நீர்' அனுப்பப்படுமெனவும் தகவல் தரப்பட்டுள்ளது.

பிரெட்டோரியாவில் வாழும் இந்தியர்

வெளியேற்றப்படுவராம்!

கேப் டவுன், ஜூலை 25—

பிரெட்டோரியாவிலும், விட்வாட்டர் சரான்டிலும் உள்ள எல்லா இந்தியர்களும், சீனர்களும் வெளியேற்றப்பட வேண்டும் என்றும், ஒரே இனத்தவர் வசிக்கும் பிரதேசமாக்கப்பட வேண்டும் என்றும், பிரெட்டோரியா நகர சபை, நில உரிமை ஆலோசனை போர்டுக்கு சிபாரிசு செய்துள்ளது.

விட்வாட்டர்'ஸ்ராண்டிஸ் 70-மைல் கரையோர நகரங்களில் வசிக்கும் இந்தியரும், பிரெட்டோரியாவில் வசிக்கும் இந்தியர்களும் ஒரு புதிய நகரில் குடியேற்றப்படுவார்கள் என்று தெரிய வருகிறது.

இந்தியாவில் காகிதத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் உள்நாட்டுக் கச்சாப் பொருள்களில் சுமார் 60 சதவிகிதம் மூங்கில்கள் ஆகும். இத்தொழிலில், ஆண்டிற்குச் சுமார் 3 லட்சம் டன் மூங்கில்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

சர்க்கரை ஆலைகள் வளர்ச்சி

வடநாட்டு மாநிலங்களுக்கு இந்திய சர்க்கார் கடன் தருகிறது

புதுடில்லி, ஜூலை 24—

கூட்டுறவு முறையில் துவங்கப் படவிருக்கும் பத்து சர்க்கரை ஆலைகளின் முதலீட்டுப் பங்குத் தொகைக்காக, பம்பாய் சர்க்காருக்கு ரூ. 1 கோடி கடன்தர, இந்தியப் பேரரசு சம்மதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

அதேபோல பஞ்சாப் மாநிலத்தில் துவங்கப்பட இருக்கும் சர்க்கரை ஆலைகளுக்காகவும் இந்திய சர்க்கார், பஞ்சாப் சர்க்காருக்கு ரூ. 40 லட்சம் தர சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

சர்க்கரைத் தொழிற்சாலைகளை வளர்க்கவும், இதர அபிவிருத்திகளை கூட்டுறவு முறையில் மேற்கொள்ளுவதை ஊக்குவிப்பதற்குமான மத்திய அரசாங்க கொள்கையை ஒட்டியே இந்தக் கடன்கள் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

அகாலி தளத்தின் அடுத்த நடவடிக்கை என்ன?

சீக்கியர்களின் கோரிக்கைகள்பற்றி விளக்கம்

அமிர்தசரஸ், ஜூலை 26—

அகாலிதளத்தவரின் செயற்குழுக் கூட்டம், வரும் ஜூலை 31-ந் தேதியன்று நடைபெறவிருந்தது இப்போது, அது ரத்து செய்யப்பட்டிருக்கிறது இதன் விளைவாக அகாலிதளத்தவர், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அடுத்து என்ன செய்யவிருக்கின்றனர் என்பதை அறிந்துகொள்ள இயலாதிருக்கிறது.

இந்தக் கூட்டத்தில்தான் அகாலியரின் கோரிக்கைகள் இன்னின்னதென்று திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டு மக்களுக்குத் தெரிவிக்கப்படும் என்று நம்பப்பட்டது.

அகாலி தளத்தின் தற்காலிகத் தலைவரான பகதூர் சிங் என்ற மக்கள் சபை உறுப்பினர், தளத்தின் ஆறு பெரும் கோரிக்கைகள் பற்றித் தகவல் தந்திருக்கிறர்.

'கடந்த ஜூலை 4-ந்தேதியன்று அமிர்தசரசில் தங்களது கிளர்ச்சியை ஒட்டி நடைபெற்ற சம்பவம் குறித்து, ஒரு விசாரணை நடத்தப்படவேண்டும்' என்பதும், அவர் கூறிய கோரிக்கைகளில் ஒன்ருகும்.

'பள்ளிகளில், பஞ்சாபி மொழி கற்றுத் தரப்படுவதற்கான சச்சார் திட்டம், விசுவாசத்தோடும், முழுவதுமாகவும் அமுல் செய்யப்பட வேண்டும்; இதனைச் செய்ய, கல்வி இலாகா முட்டுக்கட்டை போடுகிறது; ஜலந்தர் பகுதியில் பஞ்சாபி மொழியை குருமுகி லிபியில் பயிற்றுவிப்பது என்று நிர்ப்பந்தப்படுத்தியிருக்கிறர்கள், சர்க்கார்; நீதிமன்றங்களில் உருது மொழிக்குப் பதிலாக, பஞ்சாபி மொழி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்' —என்று அகாலி தளம் கோருகிறது.

இரண்டாவதாக, 'இந்து மத தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தரப்படும் உரிமைகள், சலுகைகள் போலவே, சீக்கிய மதத் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கும் தரப்பட வேண்டும்; அம்மாதிரி சலுகைகளும் உரிமைகளும், சீக்கிய மத தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்காததினுல், உத்தர பிரதேசத்தில் உள்ள பலர், சீக்கிய மத நம்பிக்கையையே இழந்துவிட்டனர். இந்தக் கோரிக்கைக்கும் பஞ்சாப் சர்க்கார் செவிமடுக்கவில்லை.'

'உத்தியோகங்களில் சீக்கியர்களைப் பாகுபாடுபடுத்தி நடத்துவது கூடாது; இராணுவத்திற்கு ஆள் எடுப்பதிலும், பாகுபாடு காட்டக்கூடாது'—என்பது அகாலி தளத்தின் மூன்ருவது கோரிக்கையாகும்.

நான்காவதாக, 'காங்கிரசார் முன்பு உறுதி மொழி கூறிவந்தபடி, பஞ்சாப் மொழி பேசும் மாநிலம் வேண்டும்' என்றும் அகாலி தளத்தவர் கேட்கின்றனர்.

அடுத்து, 'பாகிஸ்தானில் உள்ள குருத்வாரங்களைப் பற்றிய ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும்; டில்லி சர்க்கார் இதுபற்றி, கருத்துடன் கவனிக்கவில்லை. பாகிஸ்தான் அரசாங்கத்திடம் இந்தப் பிரச்சினைபற்றி எதுவுமே பேசவில்லை' என்றும் அகாலிதளத்தவர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

30 வயது மட்டுமே நிரம்பப்பெற்ற அந்த அகாலிதளத் தற்காலிகத் தலைவர், தனது சொந்த அனுபவம் ஒன்றையே எடுத்துக் காட்டாகக் கூறியிருக்கிறர்.

கடந்த 1950-ல், தான் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மந்திரியை சந்தித்து, தனக்கு ஒரு வேலை வேண்டுமெனக் கேட்ட போது அவர், தான் ஒரு சீக்கிய மத தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால் சலுகை தர முடியாதென மந்திரி மறுத்துரைத்துவிட்டார் என்ற சம்பவத்தைத்தான் குறிப்பிட்டார்.

பத்திரிகைக்கான காகித இறக்குமதி

அரசாங்கத்தின் புதிய கொள்கைக்கு எதிர்ப்பு

புதுடில்லி, ஜூலை 24—

இந்திய சர்க்கார் புதிதாக மேற்கொண்டுள்ள பத்திரிகைகளுக்கான காகித இறக்குமதிக் கொள்கையை, இங்கு கூடிய, சுமார் 100 டில்லி பத்திரிகை உரிமையாளர்கள் ஆசிரியர்கள் கூட்டமொன்று வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

கூட்டத்திற்கு சிவநாராயண பட்நாகர் என்பவர் தலைமை தாங்கி நடத்தியிருக்கிறர்.

புதிய கொள்கைப்படி, பத்திரிகைகள் தாங்களாகவே நேரடியாக தங்களுக்குத் தேவையான காகிதத்தினை இறக்குமதி செய்து கொள்ளவேண்டும், அல்லது, அங்கீகரிக்கப்பட்ட இறக்குமதியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்றிருக்கிறது.

பத்திரிகைகளுக்கு இன்றியமையாததும், மிக மலிவான ரக காகிதமுமான பத்திரிகைக் காகித இறக்குமதியில் சர்க்கார் தாராளமானதொரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மேலும், பத்திரிகை உரிமையாளர்கள், ஆசிரியர்களடங்கிய அதுக்குழு ஒன்று, மத்திய அரசாங்க, வர்த்தக, தொழில் இலாகா அமைச்சரைப் பேட்டிகண்டு, அரசாங்கத்தின் புதிய கொள்கையால் பத்திரிகைகளுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களை விளக்கிக் கூறி, அரசாங்கம் தனது கொள்கையை மாற்றிக்கொள்ளுமாறு செய்ய வேண்டுமென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

1954—55-ம் ஆண்டில் உற்பத்தியான கரும்பின் மொத்த அளவு, அதற்கு முந்திய ஆண்டிற்கான உர்பத்தி அளவை அதாவது 4,38,73,000 டன்னைக் காட்டிலும், 1,07,75,000 டன் அதிகமாகும்,

பின்தள்ளப்பட்ட வகுப்பினர் முன்னேற்றத்திற்கு சுமார் ரூ. 6 கோடி

பம்பாய் சர்க்கார் திட்டம்.

பம்பாய், ஜுலை 26—

பம்பாய் மாநிலத்தில் உள்ள பின்தள்ளப்பட்ட வகுப்பினரின் நிலையை உயர்த்துவதற்காக, இரண்டாம் திட்டத்தில் ரூ. 5 கோடி 79 லட்சம் ஒதுக்குமாறு மாநில சர்க்கார் கேட்டுள்ளனர் என்று தெரிகிறது.

கல்விக்காக ரூ. 2.11 கோடி—வீட்டு வசதி தர ரூ. 2.10 கோடி—விவசாயத்திற்காக ரூ. 38 லட்சம்—தீண்டாமை ஒழிப்புக்கென விளம்பரம் செய்ய, பிரசுரங்கள் முதலியன அச்சிட, பிரச்சாரம் செய்ய ரூ. 39 லட்சம்—என்று அந்தத் தொகை செலவிடப்படுமாம்.

பம்பாய் மாநிலமெங்கும் சிதறுண்டு கிடக்கும் பழங்குடி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக ரூ. ஒரு கோடியே பத்து லட்சம் செலவிடப்படும் என்றும் தெரிய வருகிறது.

நாடோடிகளாக அலைந்து திரிவோரில் சுமார் 50 வகுப்பினர் இருப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காக சர்க்கார் ஏதும் இதுவரை செய்யவில்லை என்றும் சர்க்கார் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களை நல்ல சுகாதாரமான இடங்களில் குடியேற்றவுமாக வழி வகைகள் கண்டறிவதற்கென தனி அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டது.

உணவு உற்பத்திப் பெருக்க இயக்கம்

ஆந்திரத்திற்கு ரூ. 67 லட்சம்

மத்திய ஆட்சியினர் தருகின்றனர்

இந்திய சர்க்கார், ஆந்திர மாநிலத்தின் உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்துக்கு உதவியளிப்பதற்காக மொத்தம் ரூ. 67.8 லட்சம் வழங்கியுள்ளனர்; இத்தொகையில், ரூ. 5.20 லட்சம் சகாயத் தொகையாகவும், ரூ. 62.6 லட்சம் கடனாகவும் வழங்கப்படும்.

ஏற்றப் பாசனத் திட்டத்துக்காக ரூ. 15 லட்சம் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மாநில சர்க்காரின் உசிதப்படி, வாடகை — விற்பனை முறையின் கீழ் எண்ணெய் எஞ்சின்களையும், மின்சார மீட்டர்களையும் விநியோகிப்பதற்கு அத்தொகை பயன்படுத்தப்படும்.

மாநில சர்க்கார் வகுத்துள்ள பாசனத் திட்டத்துக்குக் கடனாக ரூ. 9,32,000மும், சகாயத் தொகையாக ரூ. 2,96,000-மும் வழங்கப்பட்டிருக்கிறது.

நிலத்தைத் திருத்திப் பயன்படுத்துவதற்காக டிராக்டர்களை வாடகை-விற்பனை முறையின் கீழ் விநியோகிப்பதற்காக கடன் தொகையில் ரூ. 25 லட்சம் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

டில்லி மாநிலம் பெற்ற கடன்

புதுடில்லி, ஜுலை 24—

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக, டில்லி மாநிலத்திற்கு 1954—55-ல், ரூ. 10 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது. அந்த மாநிலத்திலுள்ள குடிசை, சிறு தொழில்களுக்குக் கடனாக விநியோகிப்பதற்காகவென்று இக்கடன் தொகை அளிக்கப்பட்டது.

டில்லியில் தீப்பெட்டித் தொழிற்சாலையை அமைப்பதற்காக, புதுடில்லியிலுள்ள குடும்ப நல கூட்டுறவுத் தொழில் சங்கத்துக்கு ஒரு இலட்சம் ரூபாய் கடனாகவும், ரூ. 15,000 சகாயத் தொகையாகவும் வழங்கப்பட்டது.

அந்த மாநிலத்தில் கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 1953 செப்டம்பர் முதல் 1954-ம் ஆண்டு இறுதிவரை மொத்தம் ரூ. 29,722—8—0 கடனாகவும், சகாயத் தொகையாகவும் இந்திய சர்க்காரால் வழங்கப்பட்டது.

டில்லியில் மண்பாண்ட உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக, 1954—55-ல் ரூ. 3,840 அகில இந்திய கைத் தொழில்கள் போர்டுக்கு சகாயத் தொகையாக வழங்கப்பட்டது.

பத்திரிகைத் தொழிலில் ஏகபோக உரிமை!

பத்திரிகைக் குழுத் தலைவர் கண்டனம்

"சிறிய பத்திரிகைகளை ஒழிக்கப் பெரும் சக்தி வாய்ந்த பத்திரிகை முதலாளிகள், விரிவான அளவுக்குக் கடும் போட்டியை ஏற்படுத்தி, பத்திரிகைத் தொழிலில் ஏகபோக உரிமை வகிக்க முயற்சிக்கின்றனர்;

"இந்தியாவில் அன்றாடம் வெளியாகும் பத்திரிகைகளின் மொத்த விநியோகத்தில், 15 - சத விகிதம், 15 - நபர்களின் வசமிருக்கிறது; இவர்கள், 545 பத்திரிகைகளை நடத்துகின்றனர்; ஆகவே, ஏகபோக உரிமை பெற்ற ஒரு சில பத்திரிகை முதலாளிகளே பொதுமக்கள் கருத்தை உருவாக்குகின்றனர்;

"ஒரு சில பத்திரிகை முதலாளிகளின் இந்த ஏகபோக உரிமையால், அவர்களுக்குப் பத்திரிகைத் தொழிலில் பல முக்கிய பகுதிகளில் செல்வாக்கு ஏற்பட வழி பிறக்கிறது; ஆகவே, புதுப் பத்திரிகைகளை வெற்றிகரமாக ஆரம்பிப்பது, சாத்தியமற்றதாகி விட்டது."

இந்தத் தகவலை இந்திய மொழி பத்திரிகை சங்கத் தலைவரும், பத்திரிகைக் குழுத் தலைவருமான ஏ. ஆர். பட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் சொன்னார் :—

"ஜனநாயக முறையில் அமைக்கப்படும் அரசியல், சமூக வாழ்க்கை வெற்றி பெற மேலும் மேலும் பத்திரிகைகள் விரிவான அளவுக்கு வெளிவர வேண்டும்; இவைகள் எவ்விதத் தடங்கலுமின்றி வளர்ச்சி பெற வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்."

'சோஷலிச மாதிரி'யின் விளைவு

தனியார் தொழில் துறையில் ரூ. 750 கோடி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தனியார் துறையில் நிலக்கரி, சர்க்கரை, சிறு தொழில் முதலிய தொழில்களைத் தவிர இதர தொழில்களின் அபிவிருத்திக்கு உயர்ந்தபட்சம் ரூ. 750 கோடி மூலதனமிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இரும்பு, உருக்கு தொழிலுக்கு ரூ. 125 கோடியும், உருக்கு உற்பத்திக்கு ரூ 30 கோடியும், கனரக மின்சார உபகரணங்கள் தயாரிப்பதற்கு ரூ. 3 கோடியும், மோட்டார் தொழிலுக்கு ரூ 31 கோடியும், பஞ்சு துணித்தொழிலுக்கு ரூ 100 கோடியும், சிமெண்ட் தொழிலுக்கு ரூ 67 கோடியும், காகிதத் தொழிலுக்கு ரூ 68 கோடியும், கனரக இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள் உற்பத்திக்கு ரூ. 60 கோடியும், காஸ்டிக் சோடா உற்பத்திக்கு ரூ. 21 கோடியும், சாயங்களையும் அது சம்பந்தப்பட்ட இரசாயன பொருட்களையும் உற்பத்தி செய்ய ரூ. 14 கோடியும் ஒதுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கையின்படி ஜுலை 15-ந் தேதியன்று திராவிடமெங்கணும் மும்முனைப் போராட்ட நினைவு நாள் நடைபெற்றுள்ளது; சிற்றூர்களிலும், பேரூர்களிலும் கொடியேற்று விழாவும், ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடைபெற்றுள்ளன.

மும்முனைப் போராட்டத்தில் பங்கு பெற்று வெற்றி தேடித் தந்த வீரர்களுக்கு வாழ்த்தும், போர்க்களத்தில் அடக்குமுறைகளுக்குப் பலியான வீரத் தியாகிகளுக்கு வணக்கமும் செலுத்தியுள்ளது திராவிடம்—பெருமையுடன்!

இந்நினைவு நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

சென்னை—2-வது வட்டம்

18—7—55 மாலை 7 மணிக்கு கொழும்பு உணவு விடுதி மாடியில், (கல்மண்டபம், இராயபுரம்), தோழர் மு. த. இளஞ்சேரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோவிந்தன், பெருமாள், மு. போ. வீரன், அன்பரசன், ராமசாமி, தி. ந. மதிவாணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை—5-வது வட்டம்

15—7—55ல், விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. கழகமனை பல வண்ண விளக்குகளாலும், தெருக்கள் கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு மும்முனைப் போராட்ட விளக்கச் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன. மாலை 6 மணிக்கு தோழர் உலகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் என். வி. நடராசன் துணைப் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

சென்னை—11-வது வட்டம்

15—7—55ல், கழகப் பணிமனையில் நடைபெற்றது. சிறுவருக்கு இனிப்பு வழங்கப்பட்டது. வீதி தோறும் தோரணங்கள் கட்டப்பட்டது. தோழர்கள் கா. வீ. ராதாகிருஷ்ணன், ம. லோ பாலசுந்தரம், டி. கோவிந்தன், என். ராமதாஸ், டி. வேலாயுதன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு கொள்கை விளக்கம் தந்தனர்.

சென்னை—13-வது வட்டம்

17—7—55 காலை கழகப் பணிமனையில் தோழர் சி. ர. பாண்டியன் தலைமையில், தோழர்கள் நாஞ்சில் சேவியர், வெற்றிச் செல்வன் ஆகியோர் பேசினர்.

சென்னை—14-வது வட்டம்

15—7—55ல், வட்ட முழுமையும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டும், சுவரொட்டிகள் ஒட்டியும் போராட்ட நினைவு நாள் நடைபெற்றது.

சென்னை—46-வது வட்டம்

15—7—55ல், வட்டத்திலுள்ள வீதிகள் அலங்கரிக்கப்பட்டும், சுவரொட்டிகள் ஒட்டியும், சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று மாலை கழகப் பணிமனை எதிரில், தோழர் ஏ. கோவிந்தன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் அமலன், அகமழகன், செல்வராசன், வில்லவன்கோதை, சம்மந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை—23-வது வட்டம்

17—7—55 காலை $10\frac{1}{2}$ மணிக்கு கழகச் சார்பில் தோழர் த. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை—29, 30-வது வட்டம்

21—7—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை கழகப் பணிமனையில், தோழர் ஆ. ச. வேலன் தலைமையில் 29, 30-வது வட்டங்கள் சார்பில் நடைபெற்றது. தோழர்கள் எம். உசேன், எம். கே கண்ணன், எம். ஏ. கரிகாலன், இலட்சுமணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். போராட்டத்தில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும், சிறை சென்றோருக்குப் பாராட்டும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சென்னை—32-வது வட்டம்

சென்னை எழும்பூர் 32-வது வட்டக் கிளைக் கழகச் சார்பில் வீராசாமிப் பிள்ளை தெருவில், தோழர் ஏ. கே முத்தரசு தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கோ. செங்குட்டுவன், டி. என் இராவணன், முகில்வண்ணன், ஆர். டி. அரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். போராட்டத்தில் உயிர் நீத்தத் தோழர்கட்கு வீரவணக்கம் செலுத்திக்கொள்ளப்பட்டது.

சென்னை—35-வது வட்டம்

17—7—55 மாலை 6 மணிக்கு, தோழர் க. இளங்கீரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் செயராமன், சோ. கிருட்டிணமூர்த்தி, இராசாபாதர், இரகுநாதன், க. துரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். வட்டாரத்தில் போராட்ட விளக்கச் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன.

பம்பாய்—தாராவி

17—7—55 மாலை 7 மணிக்கு, 'திராவிடரகத்'தில் தோழர் வடவைக்குயில் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மா. அண்ணாமலை, எஸ். தங்கையா, நாஞ்சில் இராசாமணி, எஸ். தியாகராசன் ஆகியோர் பேசினர். பின்னர், போராட்டத்தில் உயிர் நீத்தத் தோழர்களுக்கு வீர வணக்கமும், சிறை சென்ற தோழர்களுக்குப் பாராட்டும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

கர்னூல்

15—7—55 மாலை 6 மணியளவில், கழகப் பணிமனையில், தோழர் நா. இதயத்தோழன் தலைமையில் நடைபெற்றது. போராட்டத்தில் உயிர்நீத்த வீரர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், 2 நிமிடம் அமைதியாய் இருந்தனர். பின்னர், தோழர் சி. புவியரசு 'ஜுலை போராட்டத்தில் நாம் கண்ட வெற்றி' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

நரசிங்கபுரம்

15—7—55ல், கழகப் பணிமனை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, பகல் 1 மணியளவில் விழா கொண்டாடப்பட்டது; சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பரவை

15—7—55ல், முக்கிய வீதிகள் கழகக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, மும்முனைப் போராட்ட நினைவு நாள் விளம்பரத்தாள் வழங்கப்பட்டது.

சென்னிமலை

19—7—55 மாலை 7 மணிக்கு, குமரன் சதுக்கத்தில், தோழர் பல்லடம் பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கி. மனோகரன், வி. சண்முகநாதன், எஸ். அப்பாவு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

செண்டங்காடு

15—7—55 மாலை 5 மணி அளவில், தோழர் வை. திருமேனி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், போராட்டத்தில் பங்கு பெற்ற வீரர்களுக்கு வாழ்த்தும், உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

திருவில்லிப்புத்தூர்

15—7—55ல், காயர் சதுக்கத்தில், தோழர் ஏமராசன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் ஆ. திராவிடமணி, மும்முனைப் போராட்ட நினைவு நாள் கொண்டாடுவதற்கான காரணம் குறித்து விளக்கவுரையாற்றினார்.

ராப்ராய் (நீலகிரி-மாவட்டம்)

15—7—55 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு ராப்ராய் எஸ்டேட்டில், மாரியம்மன் கோவில் மைதானத்தில், தோழர் ஆர். தங்கவேல் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பன், வே. ஒளியோன் ஆகியோர் போராட்ட விளக்கம் குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

பட்டுக்கோட்டை

15—7—55 காலை 11 மணி அளவில் நகரக் கழகச் சார்பில், ஒலிபெருக்கி அமைப்புடன் ஊர்வலம் நடைபெற்றது. தோழர்கள் கே. மாணிக்கம், என். சங்கரன், பி. சாமிநாதன், சாமி, கோவிந்தராசு, எஸ். மலையப்பன் ஆகியோர் கொள்கைப் பிரச்சாரம் செய்தனர். இறுதியில், போராட்டத்தில் உயிர் நீத்தவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

சிங்காநல்லூர்

17—7—55 மாலை 5 மணியளவில், சிங்காநல்லூர், ஆனையங்காடு ரோடிலுள்ள ஜின்னிங் பேக்டரி கட்டிடத்தில், தோழர் இளம்பரிதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பல்லடம் பொன்னுசாமி, கோவை செழியன், நாஞ்சில் கி. மனோகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கல்லுக்குழி

15—7—55-ல், கழகப் பணிமனை அலங்கரிக்கப்பட்டு, புதுக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. அன்று மாலை 6 மணி அளவில், தோழர்கள் எஸ். எழிலன், ஒ. ஆற்றலழகன் ஆகியோர் விழாவின் நோக்கம் பற்றி விளக்கவுரை ஆற்றினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

சிவகாசி

15—7—55-ல், சிவன்கோயில் முன்பு தோழர் வே. கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், கலிங்கன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருமணங்கள்

7—7—55ல், மதுரையில், தோழர் அ. பாண்டியன்—தோழியர் பாக்கியம் திருமணம் தோழர் என். எஸ். இராசு தலைமையில் நடைபெற்றது. தோழர் அக்கினிராசன் வாழ்த்துரை வழங்கினார். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

14—7—55ல், அறந்தாங்கி ஆவணப் பதிவு மனையில் நடைபெற்ற எஸ். செல்லமுத்து—நாகம்மாள் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

21—7—55ல், ஆர். வி. பட்டியில் நடைபெற்ற திருப்பரங்குன்றம் தோழர் சையது அலி—தோழியர் ஆயிசா மர்யம் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

24—7—55 மாலை வடசென்னை குறள்நெறிக்கழகச் சார்பில் நடைபெற்ற வள்ளுவர் திருநாள் பொதுக்கூட்ட மேடையில், தோழர் பெருமாள் — தோழியர் சரோஜினி கலப்பு மணத்தை தோழர் க. அன்பழகன் நடத்தி வைத்தார். மணமக்கள் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

(அன்பளிப்புகளைப் பெற்றுக்கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்)

54 நாட்களாக வேலை நிறுத்தம்

திரு—கொச்சி சர்க்காருக்கு எதிராக நடைபெறுகிறதாம்!

புதுடில்லி, ஜூலை 26—

"திரு—கொச்சி சர்க்கார் நடத்தும் திருவாங்கூர் தாதுப் பொருள்கள் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடந்த 54 நாட்களாக நடத்திவரும் வேலை நிறுத்தம் பற்றி விவாதிக்க வேண்டும்,"

என்று ஸ்ரீகண்டன் நாயர் என்பவர் மக்கள் சபையில் கொண்டு வந்த ஒத்திவைப்புப் பிரேரணையை, துணைத் தலைவர் அனந்த சயனம் அய்யங்கார் நிராகரித்திருக்கிறார்.

'அந்த நிறுவனம் இந்திய சர்க்காருக்குச் சொந்தமானதுமல்ல— அல்லது, பிரச்சினை அவசரமானதுமல்ல,' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தென்னை நாரிலிருந்து உற்பத்தியாகும் பொருள்கள்

விரிவுபடுத்த ரூ. 2 கோடியில் திட்டம்

எர்ணாகுளம், ஜூலை 27—

திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென தென்னை நார் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் உற்பத்தி வளர்ச்சிக்காக இரண்டு கோடி ரூபாய்க்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருக்கிறது.

கால்நடை மருத்துவக் கல்லூரிகள்

நான்கு மாநிலங்களில்நிறுவப்படும்

புதுடில்லி, ஜூலை 26—

திட்டக் குழுவின் முடிவுப்படி ஆந்திரா, ஒரிசா, மத்திய பாரத், திரு-கொச்சி ஆகிய மாநிலங்களில், நான்கு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்படும் என்று தெரியவருகிறது.

இந்த மாநிலங்களில் விவசாயம், கால்நடை பராமரிப்பு முதலிய வற்றிற்கான திட்டங்களுக்குத் தேவையான கால்நடை மருத்துவப் பயிற்சி பெற்றவர்கள் பற்றாதிருப்பதின் விளைவாகவே இந்தக் கல்லூரிகள் திறக்கப்படுகின்றனவாம்.

இந்தக் கல்லூரிகளுக்காகும் செலவில் 75 சதவிகிதத்தை மத்திய அரசாங்கம் ஏற்கும் என்றும், எஞ்சிய 25 சதவிகிதத்தை அந்தந்த மாநில சர்க்கார்கள் தங்கள் பங்கு செலவுத் தொகையைப் பெற முடியாவிட்டால் இந்திய சர்க்கார் கடன் தந்து உதவும் என்றும் தெரியவருகிறது.

பாக். கடல்முகப்பை ஆழமாக்கும் திட்டம்

3 கோடி ரூபாய் செலவாகும்?

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள பாக் கடல் முகப்பில், கடலை ஆழமாக்கும் திட்டத்திற்குக் குத்துமதிப்பாக ரூ. 3 கோடி செலவாகுமென்றும், திட்டத்தை ஆராய்ந்து அறிக்கை தருவதற்கு நிபுணர்கள் குழு ஒன்று விரைவில் நியமிக்கப்படுமென்றும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு—கொச்சியில் மற்றோர் கப்பல் கட்டும் தளம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், திரு—கொச்சியில், புதியதோர் கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படக் கூடுமென அம்மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்; இது பற்றிய திட்டத்திற்கு இந்தியத் தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, வேண்டிய உதவி அளிப்பதாக உறுதிமொழி தந்துள்ளாராம்.

செஞ்சட்டை இயக்கம் தலையெடுக்கக்கூடாது

கபார்கான் மீது மிர்சா பாய்ச்சல்

"செஞ்சட்டை இயக்கத்தை மீண்டும் தலையெடுக்கவிட்டால் நாடு நாசமடைந்துவிடும்; சர்க்காருக்கும் — செஞ்சட்டையினருக்குமிடையே மோதுதல் ஏற்படுத்த கான் அப்துல் கபார்கான் முயற்சிக்கிறார்; ஆனால் பாகிஸ்தான் சர்க்கார் எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயாராக இருக்கிறது."

என்று பாக். உள்நாட்டிலாகா அமைச்சர் மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மீர்சா குறிப்பிட்டிருக்கிறார்.

மேற்குப் பாகிஸ்தானை ஒருறுப் பாக்கும் திட்டத்தைக் கபார்கான் எதிர்ப்பதாக அவர் குற்றம்சாட்டி, 'பாகிஸ்தானில் ஒழுங்கான ஆட்சி ஏற்படுவது கபார்கானுக்குப் பிடிக்கவில்லை' என்றார்.

கோவா போராட்டம்

காங்கிரசார் தனிப்பட்ட முறையில் கலந்துகொள்ளலாமாம்

புதுடில்லி, ஜூலை 26—

"கோவாவில் சத்தியாக்கிரகம் செய்ய ஆவலாக இருக்கும் தனிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் அங்கு சென்று சொந்த முறையில் சத்தியாக்கிரகம் செய்யத் தடை கிடையாது," என்று காங்கிரஸ் செயற்குழு, பிரதேச காங்கிரஸ் குழுவிற்கு அனுப்பியுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

ஃ ஃ ஃ

விடுதலைப் போருக்கு 101 சந்நியாசிகள்?

கோவா விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காகச் செல்லும் 101 சந்நியாசிகள் அடங்கிய கோஷ்டிக்கு அ. இ. சந்நியாசிகள் சாகயர் மண்டலத் தலைவர் பரமானந்தா தலைமை தாங்குவாராம்!

இந்திய 'யாத்ரீகர்'கள்

திபெத்தில் தாக்கப்பட்டனர்!

புதுடில்லி, ஜூலை 26—

திபெத்திற்குச் சென்ற இரு இந்திய 'யாத்திரீகர்'கள் கோஷ்டிக்கும்—திபெத்தைச் சேர்ந்த கொள்ளைக்காரர்களுக்குமிடையே மோதுதல் ஏற்பட்டதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

மான்ஸ்ரோவர் செல்ல திபெத் எல்லைக்குள் நுழைந்தபோது, ரூர்லா கணவாய் அருகே இந்திய யாத்திரீகர் சிலரை திபெத் வழிப் பறிக் கொள்ளைக்காரர்கள் தாக்கியிருக்கின்றனர்; இதனால் இந்திய யாத்திரீகர் பலருக்குக் காயம் பட்டிருக்கிறது.

குர்லா எனுமிடத்தில் உள்ள மான்ஸ்ரோவர் ஏரி அருகிலும் சில இந்திய யாத்திரீகர்கள் வேறொரு கொள்ளைக்கூட்டத்தால் தாக்கப்பட்டிருக்கின்றனர்; இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயமேற்படவில்லை.

இந்த இரு சம்பவங்கள்குறித்தும் அல்மோரா எனுமிடத்திலிருந்து செய்தி தரப்பட்டிருக்கிறது.

இங்குள்ள அதிகார வட்டாரத்திலிருந்து வேறெவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

எல்லையில் உள்ள அதிகாரிகளிடமிருந்து உ. பி. சர்க்கார், இதுபற்றி விரிவான அறிக்கை எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

பேச்சுவார்த்தை நடத்தத் தயாராம்!

வாஷிங்டன் ஜூலை 26—

சீனா—அமெரிக்கா ஆகிய இரு நாடுகளையும் நேரடியாகப் பாதிக்கும் பிரச்சினை குறித்து சமாதானப் பைசல் காண சீனாவுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று டல்லஸ் கூறியிருக்கிறாராம்!

வ. ஆ. மாவட்ட கிளைக் கழக செயலாளர்கட்கு

"தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்கு, சிற்றூர் கிளைக் கழகங்கள் ரூ. 20, பேரூர் கழகங்கள் ரூ. 50, நகர கழகங்கள் ரூ. 100 அளிக்க வேண்டுமென்றும், அண்ணா அவர்களை அழைக்க விரும்புகின்ற நகர கழகங்கள் ரூ. 200, மற்ற கழகங்கள் ரூ. 100 அளிக்க வேண்டுமென்றும் திருவண்ணாமலையில் கூடிய வ. ஆ. மாவட்ட தி. மு. கழகம் தீர்மானித்துள்ளது.

"அண்ணா அவர்களை அழைக்க விரும்புகின்ற கழகங்கள் 5—8—55-க்குள் செயலாளர் முகவரிக்கு தகவல் அளிக்க வேண்டுகின்றேன். உடனடியாக செயலாளர்கள் நிதி வசூலில் ஈடுபட்டு, நமது மாவட்ட கோட்டாவை பூர்த்தி செய்யுமாறும் வேண்டுகின்றேன். நிதி வசூலை செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்,"

என்று, வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

உறையூர் தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

29—7—55 இரவு 9 மணிக்கு, கழகப் பணிமனையில், தோழர் எம். எஸ். மணி தலைமையிலும், தோழர் ஜி. பராங்குசம் முன்னிலையிலும், உறையூர் தி. மு. கழகப் பொதுக் உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பொருள்: மூன்று மாத வரவு-செலவு கணக்கு சரிபார்த்தல்; மாநில மாநாட்டுக்கு நிதியளிப்பது; கழகத் தேர்தல்-செயலாளர், பொருளாளர் தேர்ந்தெடுப்பது.

ஆகஸ்டு கிளர்ச்சி எதிரொலி

ஈரோடு, கோவையில் தடையுத்தரவு

ஈரோடு, ஜூலை 26—

ஆகஸ்டு முதல் தேதியன்று, திராவிட கழகத்தவர் யூனியன் கொடியைக் கொளுத்துவதாக அறிவித்திருப்பதை ஒட்டி, ஈரோடு நகர சபை எல்லைக்குள்ளும், மற்றும் தாராபுரம் நகர சபை, இதர ஈரோடு போலீஸ் எல்லைக்குள்ளான பஞ்சாயத்துக்களின் எல்லைக்குள்ளும் ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்துவதற்கு, இரண்டு நாள் முன்பாகவே போலீசாரின் அனுமதி பெற்றாலன்றி நடத்தக் கூடாதென ஈரோடு போலீஸ் உதவி சூப்பரின்டெண்ட் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

திராவிட கழகத்தின் முயற்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சில அரசியல் கட்சியினர் முஸ்தீபு செய்வதாகவும், ஆதலால் 'பொதுஜன' அமைதிக்குப் பங்கமேற்படக் கூடுமெனவும் போலீஸ் சட்டம் 30-ம் பிரிவுப்படி பிறப்பிக்கப்பட்டுள்ள அந்த உத்தரவு கூறுகிறது.

கோவையில்

கோவையிலும், போலீசாரின் முன் அனுமதியின்றி ஊர்வலங்களோ, பொதுக் கூட்டங்களோ நடத்தக் கூடாதென தடை விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

சென்னை நகரசபை தேர்தல்

வாக்குச்சீட்டில் சின்னம்மட்டுமே இடம் பெறும்?

சென்னை, ஜூலை 23—

"1954-ல், மாவட்டக் கழகங்களுக்கு நடைபெற்ற தேர்தல்களில், ஓட்டுச் சீட்டுகளிலுள்ள சின்னங்களுக்கு எதிராகக் 'குறி' போடும் முறை கையாளப்பட்டது; இதே முறையை வரப்போகும் நகரசபைத் தேர்தலுக்கும் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது," என்ற சென்னை நகரசபை கமிஷனரின் குறிப்பை, சபை அங்கீகரித்துள்ளது.

நெல்லூரில் ஒரு கண்ணாடி தொழிற்சாலை

ரூ. 3 லட்ச செலவில் ஆந்திர சர்க்கார் நிறுவியுள்ளது

நெல்லூரில் சுமார் 3 லட்ச ரூபாய் மூலதனச் செலவில் நிறுவப்பட்டுள்ள கண்ணாடித் தொழிற்சாலை கடந்த மே 26-ந் தேதியன்று, உற்பத்தியைத் துவங்கியிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலையை சர்க்காரே நிறுவியுள்ளனர்.

ஆந்திராவில் மேலும் கண்ணாடித் தொழிற்சாலைகள் துவங்க தனிப்பட்டவர்கள் முன்வந்தால், உதவி செய்வதற்கு சர்க்கார் முன்வரக்கூடுமாம்.

இந்தத் தகவல்களை, ஆந்திர சட்டசபையில், தொழில் திட்ட இலாகா மந்திரி கானா வெங்கட்ராவ் வெளியிட்டிருக்கிறார்.

தையல் இயந்திரங்கள் உற்பத்திக்குநிதி உதவி

பழுது பார்க்கும் தொழிற்கூடம் பெப்சுவில் நிறுவப்படும்

இந்தியாவில் உள்ள சிறிய தொழில் நிறுவனங்களில், தையல் இயந்திரங்களின் 95 பாகங்கள் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன என்றும், சிறு அளவில் இயந்திர பாகங்களைக்கொண்டு பூரணமாக தையல் இயந்திரங்களை உற்பத்தி செய்து வருபவர்கள்—உபயோகிப்பவர்கள் என்ற அளவில், தையல் இயந்திரங்களின் 11-பாகங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும், கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெப்சு மாநிலத்தில் உள்ள பஸ்ஸி என்னுமிடத்தில் இத்தொழில் அதிகமாக உள்ளது என்றும், தையல் இயந்திர பாகங்களைப் பழுது பார்ப்பதற்கான மத்திய தொழிற்கூடமொன்றை பஸ்ஸியில ஏற்படுத்துவதற்காக, இந்திய சர்க்கார், பெப்சு மாநில சர்க்காருக்கு ரூ. 3,46,500 கடனாக வழங்க முடிவு செய்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது

விடுமுறை நாளைக் கழிக்க இல்லங்கள்

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு விடுமுறை நாட்களை உல்லாசமாக கழிக்கவும், நோய்நொடியினின்று உடல் தேறவுமான இல்லங்கள் அமைத்துத் தரும் திட்டம் ஒன்று சர்க்காரின் பரிசீலனையிலிருப்பதாக ராஜகுமாரி அமிர்த கௌரி, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'ஆதாரமற்ற செய்தி' என அறிவிப்பு!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சர்க்கார் அதிகாரிகள், மற்றும் தங்கள் அலுவலகங்களில் உள்ள கீழ்த்தர, நடுத்தர சிப்பந்திகளின் சம்பளங்களை உயர்த்துவதற்கான பிரரேபணைகளை சென்னை சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருப்பதாக வெளியான செய்திகள் ஆதாரமற்றவையென்றும், இத்தகைய திட்டங்கள் எதுவும் தற்போது ஆலோசிக்கப்படவில்லை என்றும் பத்திரிகைக் குறிப்பொன்றில் சர்க்கார் அறிவித்துள்ளது.

தெ. ஆ. மாவட்டத்தில்...

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

தென்னாற்காடு மாவட்டத்தில் இரு புதிய ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகள் திறப்பதற்கு சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளதாம். கடலூர், விழுப்புரம் ஆகிய இரு இடங்களிலுள்ள சர்க்கார் பயிற்சிப் பள்ளிகளில் 160 - பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

வெளிவந்துவிட்டது!

'திராவிடர் எழுச்சிப் பாடல்கள்'

இயற்றியவர்: ஏ.கே.குமாரவேலன்

விலை: அணா நான்கு

கிடைக்குமிடம்:

தேன்மொழி வெளியீடு,

சேவூர்(அஞ்சல்): ஆரணி(வ.ஆ.மா)

******** **********

இந்திய சர்க்கார் செய்திப் படங்கள்

வட்டாரப் பதிப்புகள் வெளியிட ஏற்பாடு

'இந்திய சர்க்கார் வெளியிட்டு வரும் செய்திப் படங்களுக்கு வட்டாரப் பதிப்புகளைத் தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வது பற்றி தீவிரமாக யோசிக்கப்பட்டு வருகிறது,' என்று, மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

'ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் திரையிடப்படுவதற்கான செய்திப் படங்கள் எந்த அடிப்படையில் தெரிந்தெடுக்கப்படுகின்றன?— என்று தோழர் என். எம். லிங்கம் கேட்டார்.

செய்தி முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே, செய்திப் படங்களில் சேர்க்கப்படுவதற்கான நிகழ்ச்சிகள் தெரிந்தெடுக்கப்படுவதற்கான நிகழ்ச்சிகள் தெரிந்தெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், செய்திப் படங்கள் அகில இந்திய அடிப்படையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டதுடன், இப்பொழுது வெளியிட உத்தேசித்துள்ள வட்டாரப் பதிப்புகளில் வட்டார முக்கியமுள்ள நிகழ்ச்சிகள் குறிப்பிட்டதொரு அளவுக்கு சேர்த்துக் கொள்ளப் படுமென்றும் குறிப்பிடப்பட்டது.

'காலனி ஆதிக்கம் இருத்தலாகாது!'

அமெரிக்க சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

"எந்த வகையான காலனி ஆதிக்கமும் இருத்தலாகாது," என்னும் தீர்மானம் அமெரிக்க சட்ட சபையில் ஏகமனதாய் நிறைவேறியுள்ளது.

"ஏகாதிபத்தியமும் வேறு வகைக் காலனி ஆதிக்கங்களும் மனிதனுக்குரிய பிரிக்க முடியாத உரிமைகளை மறுப்பவையாதலாலும், சுய ஆட்சியும் சுதந்தரமும் பெறும் பொருட்டு, கொடுங்கோன்மையையும் அரசியல் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடிய நாடுகளுக்கு அமெரிக்கா தொன்று தொட்டு ஆதரவளித்து வந்திருப்பதாலும், மற்ற நாடுகள் சுய ஆட்சி பெறும்படி செய்யும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் முறையில் அமெரிக்கா, தனது வெளிநாட்டுக் கொள்கையை நடத்தி வைத்துத் தன் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்," என்று அத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

லைசென்சு முறை ரத்து

சென்னை, ஜூலை 25—

உணவு தானிய 'லைசென்சு' கொள்முதல் உத்தரவின் அமுல் ஜூலை 2-ந் தேதியே ரத்தாகிவிட்டது.

50 மணங்குக்கு மேற்பட்ட உணவு தானியங்களை வைத்திருக்க லைசென்சு தேவை என்பதும், கொள்முதல் செய்வதற்கு சர்க்காருக்கு அதிகாரம் தருவதும் அந்த உத்தரவில் இருந்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.